

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எண்ணூர் கொசஸ்தலை ஆற்றுப்பகுதியில் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளால் நச்சுப் புகை, சாம்பல் கழிவுகளால் மீன்வளம் பாதிப்பு குறித்தும் அதனால் மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் தமிழ்நாடு மின்சாரம் மற்றும் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆகியோரிடம் தக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் எண்ணூர் 8 மீனவ கிராம நிர்வாகிகளுடன் நேரில் சந்தித்து மனு வழங்கினார். இந்நிகழ்வில் எண்ணூர் 8 மீனவ கிராம நிர்வாகிகள் தாழங்குப்பம் ஆர்.குமரன், நெட்டுக்குப்பம் இ.குமரவேல், காட்டுக்குப்பம் கருணாகரன், முகத்துவார் குப்பம் முத்துகிருஷ்ணன், சிவன் படை குப்பம் செஞ்சி மணி, எண்ணூர் குப்பம் வெங்கடேஷ், பெரிய குப்பம் ராஜ்குமார், சின்ன குப்பம் சரவணன், உடன் இருந்தனர்.

## மணிப்பூரில் 4 மாதங்களுக்குப் பிறகு இணைய சேவை!

இம்பால், செப்.24-

மணிப்பூரில் கலவரம் காரணமாக கடந்த மே மாதம் நிறுத்தப்பட்ட மொபைல் இணைய சேவைகள் தற்போது நான்கு மாதங்கள் கழித்து மீண்டும் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பான அறிவிப்பை மணிப்பூர் மாநில முதலமைச்சர் பிரேன் சிங் நேற்று முன்தினம் காலை வெளியிட்டார். போலி செய்திகள், தகவல்கள் மற்றும் வெறுப்பு பேச்சுக்கள் பரவுவதை தடுக்கும் வகையில், அரசு மொபைல் இணைய சேவைகளை மே 3ம் தேதியில் இருந்து தடுத்து நிறுத்தி வைத்து இருந்தது. இந்த தடை நேற்று மாநிலம் முழுக்க நீக்கப்பட்டு இருக்கிறது. இந்தியா மியான்மர் எல்லை வழியாக சட்டவிரோத ஊடுருவல்களை தடுத்து நிறுத்த மாநில அரசு தொடர்ந்து முயற்சித்து வருவதாகவும், மத்திய அரசு மணிப்பூரில் உள்ள 60 கிலோ மீட்டர் எல்லை பகுதியில் வேலி அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அரசு அதிகாரி தெரிவித்து உள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிகுட்பட்ட திருத்தணி, ஜி.ஆர்.டி. கல்லூரியில் வளாகத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பாக மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் நடைபெற்றது இதில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி முன்னாள் ஒன்றிய அமைச்சர் டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் வேலை வாய்ப்பு முகாமை துவக்கி வைத்து பல்வேறு தொழில் நிறுவனங்கள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 619 நபர்களுக்கு பணி ஆணைகளை வழங்கினார்கள் அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், வேலைவாய்ப்பு துறை மண்டல இணை இயக்குநர் தேவேந்திரன், உதவி இயக்குநர் திருமதி.க.விஜயா, திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.க.தீபா, உள்ளாட்சி பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில்! வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# திருத்தணியில் வேலைவாய்ப்பு முகாமில் பணி ஆணைகள்!

## அமைச்சர் ஆர்.காந்தி - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வழங்கினர்!

திருவள்ளூர், செப்.24

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, ஜி.ஆர்.டி. பொறியியல் கல்லூரியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பாக திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் நடைபெற்றது.

இதில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 121 நிறுவனங்கள் பங்கு பெற்று தங்கள் நிறுவனத்தில் உள்ள காலி பணியிடங்களுக்கான நபர்களை தேர்வு செய்யும் பொருட்டு நடத்தப்பட்ட பல்வேறு தேர்வு முறைகளில் தேர்ச்சி பெற்று தேர்வுசெய்யப்பட்ட 619 நபர்களுக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, டாக்டர். எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் பணி ஆணைகளை வழங்கினர்.

தேர்வு செய்யப்பட்ட 619 நபர்களில் ஆண்கள் 456 அவர்களும் பெண்கள் 159 நபர்களும் மாற்றுத்திறனாளிகள் 4 நபர்களும் உள்ளனர். மேலும், இம்மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்ட 654 நபர்கள் இரண்டாம் கட்ட தேர்வுக்கு தேர்வு செய்யப்பட்டு இரண்டாம் கட்ட தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அதில் ஆண்கள் 600 நபர்களும் பெண்கள் 54 நபர்களும் அடங்குவர்.

இதன் முன்னதாக, திருத்தணி, ஜி.ஆர்.டி. பொறியியல் கல்லூரியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பாக நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, இம்மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாறு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், வேலைவாய்ப்பு துறை மண்டல இணை இயக்குநர் தேவேந்திரன், உதவி இயக்குநர் க.விஜயா, திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் க.தீபா, உள்ளாட்சி பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி,

# இளைஞர்நலன் திருவிழா 2023-24 மாநில அளவிலான ரெட் ரன் மாரத்தான் போட்டி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.24-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (23.9.2023) தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் சார்பில் நடைபெற்ற இளைஞர் திருவிழா 202324 மாநில அளவிலான ரெட் ரன் மாரத்தான் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ், பதக்கம் பரிசுத் தொகை வழங்கி சிறப்புரையாற்றினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், இளைஞர் திருவிழா 202324 என்ற நிகழ்ச்சியின் மூலம் அனைத்து மாவட்டங்களில் இருந்து 550 கல்லூரிகளில் இருந்து, 17 வயது முதல் 25 வயதிற்குட்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட, நெடுந்தூர ஓட்டம், நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்றவர்கள்,ஆண் - 222 பேர்பெண் - 172 பேர் மூன்றாம் பாலினத்தவர் - 9 பேர் மொத்தம் - 403 பேர் வெற்றி பெற்ற மாணவர்களை வைத்து, எய்ட்ஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் "ரெட் ரன் (மாரத்தான்)" இன்று தீவுத்திடல் தொடங்கி வைக்கப்பட்டது. வெற்றி பெறுபவர்களுக்கு, முதல் பரிசு - ரூ.35,000, இரண்டாம் பரிசு - ரூ.25,000, மூன்றாம் பரிசு - ரூ.15,000 இதில் வெற்றி பெரும் மாணவர்கள், 08.10.2023 அன்று தேசிய அளிவில் கோவா மாநிலத்தில் நடைபெறவுள்ள "ரெட் ரன் (மாரத்தான்)" நிகழ்ச்சியில் பங்கு பெறுவார்கள்.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம்

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் 22.4.1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மேலும் எச்.ஐ.வி பாதிப்பு இந்திய அளவில் 0.22 % உள்ளது. மேலும் தமிழ்நாட்டில் - 0.17 % தமிழ்நாடு அரசு வழங்கிய 25 கோடி நிதி உதவியில் இருந்து பெறப்பட்ட வட்டித் தொகையை கொண்டு எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்விக்கு உதவியாகவும், ஊட்டச்சத்து மிக்க உணவிற்காகவும் செலவிடப்பட்டு வருகிறது. 202223 ஆம் ஆண்டு, ரூ.2.17 கோடி நிதி - 6786 எச்.ஐ.வி பாதித்த குழந்தைகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. தாயிடமிருந்து குழந்தைகளுக்கு எச்.ஐ.வி தொற்று பரவுவதை தடுக்க 2,962 நம்பிக்கை மையங்கள் செயல்படுகிறது. மேலும், தமிழ்நாடு முழுவதும் 34 இளைப்பாறுதல் மையங்கள், 55 கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள், 64 சிகிச்சை மையங்கள் செயல்படுகிறது. மேலும் ஏப்ரல் 2023 முதல் ஆகஸ்ட் 2023 வரை 11,51,142 பொதுமக்களுக்கும், 44,48,784 கர்ப்பிணிப் பெண்களுக்கும் எச்.ஐ.வி ஆலோசனைகள் மற்றும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில், ரூ.37.24 இலட்சம் செலவில், கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு எச்.ஐ.வி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் திட்ட இயக்குநர் ஹரிஹரன் உடனிருந்தார்.

### எண்ணூர் அனல் மின் நிலையத்தால் மேற்கொள்ளப்படும் பணிகளால்

# கொசஸ்தலை ஆற்றில் நச்சுப்புகை - சாம்பல் கழிவு - மீன் வளம் பாதிப்பு!

## தகுந்த நடவடிக்கை எடுக்க அமைச்சர்கள் தங்கம் தென்னரசு - ஆர். காந்தியிடம் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. மனு!

சென்னை, செப். 24 -

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எண்ணூர் கொசஸ்தலை ஆற்றுப் பகுதியில் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் அதனால் மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் தமிழ் நாடு மின்சாரம் மற்றும் நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களையும், திருவள்ளூர் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் ராணிப் பேட்டை ஆர்.காந்தி அவர்களையும் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் எண்ணூர் 8 மீனவ கிராம நிர்வாகிகளுடன் நேரில் சந்தித்தார்.

காலம் காலமாக மீனவர்கள் மீன் பிடித்து வந்த கொசுஸ்தலை ஆற்றுப்பகுதியில் அதிக அளவில் வெளியேற்றப்படும் நச்சுப்புகையாலும் சாம்பல் கழிவுகளாலும் சுடுநீராலும் மீன்வளம் முற்றிலுமாக அழிந்து விட்டது என்றும் அதனால் வாழ்வாதாரத்தை இழந்து வாடும் மீனவர்களுக்கு அதற்கு மாற்றாக அனல் மின் நிலையத்தில் பணியில் அமர்த்தப்படும் தொழிலாளர்களில் எண்ணூர் 8 கிராம மீனவ மக்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கை வைத்து பல போராட்டங்கள் நடந்து வந்த நிலையில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்த பின்பு மீனவர்கள் வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் என நடைபெற்ற பலதரப்பட்ட பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு ஏற்படாத நிலையில் அமைச்சர்களை சந்தித்து மீனவ மக்கள் சார்பில் கோரிக்கை மனு அளித்தார்.

இந்நிகழ்வில் எண்ணூர் 8 மீனவ கிராம நிர்வாகிகள் தாழங்குப்பம் ஆர்.குமரன், நெட்டுக்குப்பம் இ.குமரவேல், காட்டுக்குப்பம் கருணாகரன், முகத்துவார் குப்பம் முத்துகிருஷ்ணன், சிவன் படை குப்பம் செஞ்சி மணி, எண்ணூர் குப்பம் வெங்கடேஷ், பெரிய குப்பம் ராஜ்குமார், சின்ன குப்பம் சரவணன், உடன் இருந்தனர்.

### சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில்

# மாபெரும் இலவச மருத்துவ முகாம்!

## மயிலை த.வேலு - தமிழச்சி தங்கபாண்டியன் - எழிலன் - ஜெ.கருணாநிதி -கே.ஏழுமலை பங்கேற்பு!

சென்னை, செப். 24 -

சென்னை தென்மேற்கு மாவட்ட திமுக மருத்துவர் அணி சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் இன்று (24-9- 2023- ஞாயிற்றுக்கிழமை) தியாகராயர் நகர் தொகுதிக்குட்பட்ட 141-வது வட்டம் காமராஜர் காலனியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சி தியாகராயர் நகர் சட்டமன்றத் உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில், தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை நந்தனம் கி.மதி எம்.சி., எஸ்.முரளி ஆகியோர் முன்னிலையில் 141-வது வட்டக் கழகச் செயலாளர் லலிதாபுரம் என்.துரை, 141-வது 'அ' வட்ட செயலாளர் எஸ்.லட்சுமிகாந்தன் வரவேற்புரையில் நடைபெறவுள்ளது .

இ ந் நி க ழ் ச் சி யை சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மாநில மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் நா.எழிலன், மாநில மருத்துவ அணி தலைவர் மருத்துவர் கனிமொழி எம்.பி. மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. ஆகியோர் துவங்கி வைக்கின்றனர்..

மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் ஜெ.அருண், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் கலை கதிரவன், மாவட்ட அமைப்பாளர் கோ.சக்தி விக்னேஷ் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

நிகழிச்சி ஏற்பாடு .எம். எ ஸ் . ச ர வ ண கு ம ா ர் (சென்னை தென்மேற்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர்) இந்த இலவச மருத்துவ முகாம் மூலம் பொதுமக்கள் அனைவரும் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியத்தில்

# பூத் வாரியாக கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், செப். 24 -

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியத்தில் பூத் வாரியாக கழகச் செயல் வீரர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆணைக்கிணங்க, மாவட்டக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட மாவட்ட சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு அணி துணை அமைப்பாளர் ஜி.ஏ.ராயப்பன் தலைமையில் இன்று (24.9.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி முதல் 10 மணி வரை, மொளச்சூர், 31 வது பூத்திலும், காலை 10 மணி முதல் 11 மணி வரை, மொளச்சூர், 32 வது பூத்திலும், காலை 11 மணி முதல் 12 மணி வரை, மொளச்சூர், 33 வது பூத்திலும், பகல் 12 மணி முதல் 1 மணி வரை, மொளச்சூர், 34 வது பூத்திலும்,

மதியம் 2 மணி முதல் 3 மணி வரை, மொளச்சூர், 35 வது பூத்திலும், மதியம் 3 மணி முதல் 4 மணி வரை, மொளச்சூர், 36 வது பூத்திலும், மதியம் 4 மணி முதல் 5 மணி வரை, மொளச்சூர், 37 வது பூத்திலும், மாலை 5 மணி முதல் 6 மணி வரை, சோகண்டி, 38 வது மற்றும் 39 பூத்களில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

ஒன்றியத்தின் சிறப்பு மிகு பூத் பொறுப்பாளர்களாக மொளச்சூர் (31 முதல் 37 பூத்) வரை இ. முனிகிருஷ்ணன், டி.பிரபாகரன், ஏ.நாசர், சி.ராஜேந்திரன், கே.ஆண்டனி வினோத் குமார், என். ஜெ.ஜெரால்டு, ஐ.பழனி, சி.ராஜா, பிரபு மைக்கேல், வில்லியம்ஸ், எஸ்.எஸ். எஸ்.வேல்நிதி, அரிநிதி, கே.கீதா ஆகியோரும், சோகண்டி (38 மற்றும் 39 பூத்களுக்கு) எஸ்.கே.பாலா (எ) பால்ராஜ் ஆகியோர் செயல்படுவார்கள்.

மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், பி.எல்.ஏ.2 முகவர்கள், வாக்குச் சாவடி தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள், பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னாள், இந்நாள் நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி கேட்டுக் கொள்கிறேன்.

# பம்மல் தெற்கு பகுதியில் பாகம் வாரியாக செயல் வீரர்கள் கூட்டம் !

## பகுதிச் செயலாளர் வே. கருணாநிதி எம்.சி. வேண்டுகோள்!

சென்னை செப்:24

பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தாம்பரம் மாநகரம்,பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் பாகம் வாரியாக செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் அறிவுறுத்தல்படி மாவட்ட கழகத்தினால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் தாம்பரம் மாநகர அவைத் தலைவர் துணை மேயர் கோ.காமராஜ்,மாவட்ட கழக பிரதிநிதி அனகை சி.பார்த்தசாரதி, மாநகர கழக பிரதிநிதி அ. ராமச்சந்திரா ராஜா ஆகியோர் மேற்பார்வையில் ஆலோசனைகளை வழங்க கூட்டங்கள் நடைபெற உள்ளன.

இன்று (24.9.2023, ஞாயிற்றுகிழமை) வார்டு 5,6,7,8 மற்றும் 10வது வார்டு கழகத்தின் சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

பகுதி கழகத்தின் சார்பில் 5வது வார்டுக்கு காஞ்சி வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு மு.துணை வே.க.தன்ராஜ்,மாநகர கழக பிரதிநிதி ரா.கோகுல்,6வது வார்டுக்கு மாவட்ட கழக பிரதிநிதி பா.டில்லி,மாநகர பிரதிநிதி பீ.ஜே.வேந்தன்,7வது வார்டுக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் எல். பிரபு,பகுதி கழக துணை செயலாளர் துரை இளங்கோவன்,8வது வார்டுக்கு பகுதி கழக துணை செயலாளர் என். பன்னீர்செல்வம், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சத்தியபிரபு,10வது வார்டுக்கு மாவட்ட மகளிர் அணி மு.துணை அமைப்பாளர்தா. மா.கணக்கு குழுத் தலைவர் அ.மதினாபேகம்,பகுதி கழக துணை செயலாளர் பா. கவிதா, பம்மல் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் செ.அமிர்தராஜ் ஆகியோர் பகுதிக் கழக பிரதிநிதிகளாக சென்று கூட்டத்தை கண்காணிப்பார்கள்.

வட்டக் கழக செயலாளர்கள் இக்கூட்டங்களில் தேர்தல் பணி குழு கழக உறுப்பினர் 11 பேர், இளைஞர் அணி 10 பேர், மகளிர் அணி 10 பேர் ஆக மொத்தம் 31 பேர் 100 வாக்காளருக்கு ஒருவர் என அமைக்கப்பட்ட குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் அந்த பாகத்தில் வசிக்கும் நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து அந்த பாகத்துக்கு உட்பட்ட ஒரு இடத்தில் சிறப்பான முறையில் கூட்டத்தை ஏற்பாடு செய்து பாக முகவர் தலைமையில் வட்டக் கழக நிர்வாகிகள் முன்னிலையில் கூட்டத்தை ஏற்பாடு செய்து அனைவருக்கும் துண்டறிக்கை தந்து சிறப்பாக கூட்டத்தை நடத்திடுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு பகுதி கழகச் செயலாளர்தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் வே.கருணாநிதி தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி

# பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல்!

## மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர். விஜய் அறிவிப்பு!

சென்னை, செப்.24

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அவர்களின் ஆலோசனையின் படி, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிவுறுத்தல் படி சென்னை மேற்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட அண்ணாநகர் வடக்கு, அண்ணாநகர் தெற்கு, ஆயிரம்விளக்கு கிழக்கு, ஆயிரம்விளக்கு மேற்கு, சேப்பாக்கம், திருவல்லி க்கேணி ஆகிய பகுதிகளுக்கு மாணவர் அணி பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் வரும் 26.09.2023 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி முதல் மாவட்டக் கழகஅலுவலகம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம், எண்.20/32, காம்தார் நகர் முதல் தெருவில் நடைபெறவுள்ளது.

மாநில மாணவர் அணி இணை செயலாளர் எஸ். மோகன் முன்னிலையில்

தலைமைக் கழகத்தின் சார்பில் நேர்காணல் நடத்தும் மாநில நிர்வாகிகள் மன்னை

த.சோழராஜன் மற்றும் பூர்ண சங்கீதா ஆகியோர் தலைமையில் நடைபெறும்.

ஆகவே, நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு

வரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, மாணவர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கனவே பணியாற்றியிருந்தால், அது தொடர்பான புகைப்பட தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் கேட்டுக் கொண்டுள்ளார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் அரசு பொது மருத்துவமனையில் மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர்.திவாகர் வாசுதேவன் ஏற்பாட்டில் ரூபாய் 2 லட்சம் மதிப்புள்ளமருத்துவ உபகரணங்களை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் ஆர்.டி.அரசு ஒன்றிய செயலாளர் கெ. ஞானசேகரன் இரா நாகன். பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல் உள்ளிட் பலர் கலந்து கொண்டனர்.



திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு பட்டிமன்றம் பகுதி கழக செயலாளர் வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கோவி.செழியன் எம்.எல்.ஏ நடுவராக கொண்டு நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் மாதவரம். எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகித்து உரையாற்றினார் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.